CoFutures

கோ:பியுச்சர்ஸ் - சமகால உலகளாவிய எதிர்காலம், அறிவியல் புனைகதை, மற்றும் எதிர்கால சிந்தனை ஆகியவற்றை ஆய்வு செய்யும் ஒரு சர்வதேச ஆய்வு குழு. நாங்கள் தற்போது பூமி எதிர்கொண்டுள்ள சவால்கள் ஆன பருவநிலை மாற்றம், தொழில்நுட்ப மாற்றம், மற்றும் மக்கள்தொகை மாற்றம் போன்றவற்றை அறிவியல் புனைகதை, ஏக சிந்தனை, மற்றும் எதிர்கால கல்வியறிவு ஆகியவற்றை பயன்படுத்தி எதிர்கொள்கிறோம்.

கோ:பியுச்சர்ஸ் நம்புவது என்னவென்றால், எதிர்காலத்தை நன்கு புரிந்து கொள்ள, அது மனிதகுலம் தொடர்பாக இருந்தாலும், மற்ற உயிரினங்கள் தொடர்பாக இருந்தாலும், தொழில்நுட்பம் அல்லது பூமியை பற்றியதாக இருந்தாலும் எதிர்காலத்தைப் பற்றிய உலக மக்களின் சிந்தனை என்னவென்பது குறித்த ஆய்வில் நாம் ஈடுபட வேண்டும். பூமியின் சவால்களை எதிர்கொள்ள உள்ளூர் கற்பனையாளர்கள் மற்றும் சர்வதேச கற்பனையாளர்களுக்கு இடையே இணைப்புகளை ஊக்குவிப்பதே எங்களது இலக்கு. நிலைத்தன்மை குறித்த சிக்கல்களை தீர்க்க நாங்கள் ஒரு தனித்துவம் வாய்ந்த ஊகத்தை பயன்படுத்துகிறோம். நாங்கள் புதுமைக்கான மாற்றுப் பார்வைகளையும், எதிர்காலத்திற்கான பாரம்பரியமற்ற பார்வைகளையும், மற்றும் சுற்றுச்சூழல் நீதி குறித்த கேள்விகளையும், குறிப்பாக ஓரங்கட்டப்பட்ட சமூகங்களின் கண்ணோட்டத்தில் இருந்து ஆராய்கிறோம்.

ஓஸ்லோவில் அமைந்துள்ள கோ:பியுச்சர்ஸ் உலகெங்கிலும் பல சமூகங்களிலும், ஆராய்ச்சிக் குழுக்கள் மற்றும் வலைதளங்களிலும் தனது பரந்து விரிந்த செயல்பாடுகளை கொண்டுள்ளது. கொள்கை, கோட்பாடு, தொழில்நுட்பம், மற்றும் கலை ஆராய்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு துறையைச் சார்ந்த ஆய்வுகளில் ஈடுபட்டு கொண்டுள்ளது.
மேலும் புனைகதை, திரைப்படங்கள் மற்றும் காணொளி விளையாட்டுகள் போன்ற பரிமாற்ற கலை ஊடகத்தை தயாரிக்கவும் அல்லது ஆதரிக்கவும் செய்கிறது.

கோஃபியுச்சர்ஸ் இன் முக்கியமாக திட்டங்கள் :

1. 'கோஃபியுச்சர்ஸ்: பாத்வேஸ் டு பாசிபில் பிரசெண்ட்ஸ்'. இந்த திட்டம், ஐரோப்பிய ஆராய்ச்சி சபையிடம் 'யூரோபியன் யூனியன் ஹரிசான் 2020 ரிசர்ச் அண்ட் இன்னோவேஷன்' நிரல் மானியத்தின் கீழ் நிதியைப் பெற்றுள்ளது.
2. 'சயின்ஸ் ஃபியிக்ஷனாலிட்டி ' : இந்தத் திட்டம் நார்வேஜியன் ஆராய்ச்சி சபையிடம் FRIPRO-YRT இன் கீழ் நிதியைப் பெற்றுள்ளது.

இந்தத் திட்டங்களை வழங்கியது : கலாச்சார ஆய்வுகள் மற்றும் கிழக்கு ஆசிய மொழிகள் துறை, ஓஸ்லோ பல்கலைக்கழகம்.

போதிசட்வா சட்டோபத்யை, கோஃபியுச்சர்ஸ் இன் முதன்மை புலனாய்வாளர். இவர் புனைகதையில் ஆராய்ச்சியாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் மற்றும் தொகுப்பாளராகவும் பணியாற்றுகிறார். இவர் புனைகதை சம்பந்தமான ஆறு நூல்களின் நூலாசிரியர். 'ஸ்டிடீஸ் இன் கிலோபல் ஜெனரே ஃபிக்ஷன் (ரூடில்லெட்ஜ்)' என்னும் புத்தகத் தொடரின் இணை நிறுவனர் மற்றும் இணை ஆசிரியர். இவர் ஓஸ்லோ பல்கலைக்கழகத்தில் உலகளாவிய கலாச்சார ஆய்வுகளின் இணைப்பேராசிரியர்.

தொடர்புக்கு:

👤 Bodhisattva Chattopadhyay
📫 Department of Culture Studies, University of Oslo, Postboks 1010 Blindern, 0315 Oslo, Norway
✉️ bodhi@bodhisattvac.com
🌐 http://cofutures.org